**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 109/2011**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 02.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பாலுச்சாமி Father's Name : முத்து

துவக்க நேரம்: 12.57 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. தாவா சொத்துகளின் மேல்புறம் உள்ள சொத்துக்களை 1-ம் பிரதிவாதி நான் கிரையம் பெற்ற பொன்னுசாமியிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். கடந்த 19.02.2018-அன்று நான் பொன்னுசாமியிடம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் ராஜேந்திரன் , கற்பகம், வளர்மதி என்றாலும் மற்றும் அவரது தந்தை பெயர் குப்புசாமி என்றாலும் சரிதான்.

2. கடந்த 21.01.2004 அன்று தாவா சொத்து தொடர்பாக 1-ம் பிரதிவாதியும் அவரது குடும்ப உறுப்பினர்களும் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினைமூலம் 1-ம் பிரதிவாதிக்கு D பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தை பொன்னுசாமி கிரையம் பெற்று அவரிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்பவர் 3-ம் பிரதிவாதி பொன்னுசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கு அதிகமாக பொன்னுசாமி எனக்கு கிரையம் செய்து கொடுக்க உரிமை இல்லை என்றால் பொன்னுசாமி என்ன கிரையம் பெற்றாரோ அதைதான் எனக்கு எழுதிக்கொடுத்தார்.

3. 1-ம் பிரதிவாதி சகோதரர் ராஜேந்திரனுக்கு ஒதுக்கப்பட்ட E பாக சொத்தை அவரும், அவரது வாரிசுகளும் சேர்ந்து 1 முதல் 3 வாதிகளுடன் கடந்த 23.10.2007- அன்று பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வாதிகள் பரிவர்த்தனை செய்துகொண்ட சொத்துக்கள்தான் தாவா சொத்துக்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்த்த பின்னர் இந்த வழக்கின் முழு விவரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.09 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.109/2011, Dt.02.02.2026.